1466

OFFICE OF THE REGISTRAR
No.
17 DEC 1929
MADRAS

*Regis. No. M. 2147.*

# THE AGRICULTURIST

***A monthly Journal devoted to Agriculture and its allied subjects***

# கிருஷிகன்

**ஓர்மாதாந்தர விவசாயப் பத்திரிகை**

Vol XII | 1929௵ டிசம்பர்௴ 15௳ | No 9.
புத்தகம் 12 | சுக்கில ௵ மார்கழி௴ 1௳ | பிரதி 9.

CONTENTS — PAGE.

Some researches made by the Ceylon Agricultural Department in green Manuring Paddy — 211
A Warning — 215
Results of Demonstrations of agricultural Improvement in Madras circle carried out in 1924-1927, compiled by Mr D. Anandha Rao & published by the Agricultural department as Bulletain No. 97 of 1929 — 216
Errata — 220
Correspondence — 223
Central board of Agriculture — 234
Almanack — 235

பொருளடக்கம் — பக்கம்

பசுந்தாள் உரம் நெல் பயிருக்கு இடுவதில் ஸிலோன் விவசாய டிபார்ட்மெண்டார் செய்த சில ஆராய்ச்சிகள் — 211
ஓர் எச்சரிக்கை — 215
ஸ்ரீமான் ராவ்பஹதூர் டி. ஆநந்தராவ் பி. யஸ்சி. அவர்களால் தயாரித்து விவசாய டிபார்ட்மெண்ட் 1929௵ த்திய புல்லெடின் நம்பர் 47 மூலமாய் வெளியிட்ட 1924௵ முதல் 1927௵ வரை சென்னை சர்க்கிளில் நடத்திய விவசாய சம்மந்தமான சீர்திருத்தங்கள் — 216
பிழைதிருத்தம் — 220
கடிதம் — 223
மத்திய விவசாய போர்ட் — 234
பஞ்சாங்கம் — 235

**Editor Rao Bhadur J Chelvaranga Raju**
**'Jagannadha Baugh' SAIDAPET-**
Annual Subscription including postage Re, One only

Copy right) (Registered

ஒரு புட்டி மருந்தினுல் அடைவதைவிட நாம் வாழும்
வாழ்வினுலேயே தேகாரோக்கியத்தை அடையலாம்
ஆரோக்கிய மார்க்கங்களை போதிக்கும் ஆரோக்கிய தீபிகை
யானது இம்மாதிரியாகவே ஆரோக்கியத்தை அடையச் செய்கிறது.
ஆனரபில் டாக்டர் யூ. ராம ராவ் யூ. கிருஷ்ணராவ், எம். பி. பி.எஸ்.,
இவர்களால் பிரசுரிக்கப்படுகிறது.

ஆரோக்கியம் வியாதி இவைகளைக் குறித்து வைத்திய நிபுணர்களால் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகளை ஆரோக்கிய தீபிகையானது உங்கள் வீடுகளில் நுழையச் செய்கிறது. வெகுநாள் அனுபோக முள்ளவரும் விஸ்தாரமாய் வைத்தியம் செய்து வருபவருமாகிய, வைத்தியத்திலும், ரணவைத்தியத்திலும் பெயர்பெற்ற ஒருவர் உங்கள் வீட்டிற்குள் வந்து, உங்களுக்கும் உங்கள் குடும்பத்தார்க்கும் ஆவசியகமான ஆரோக்கிய விஷயங்களை நேரில் எளிய நடையில் நீங்கள் தெரிந்து கொள்ளும்படி உங்களுக்குப் போதிப்பின் அது எவ்வளவு நலம் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். "ஆரோக்கிய தீபிகையானது" அதை வாசிப்போர்க்குச் செய்யும் தொண்டு இது தான். பிரதி மாதமும், இதில், ஆரோக்கியத்திற்கு முக்கியமான விஷயங்கள், அதாவது, உணவு, போஷிப்பு, நோய்களைத் தடுக்கும் மார்க்கம், சிசுக்கள் பாராமரிப்பு, அவைகளின் ஆகாரம், குழந்தைகளைப் பழக்குதல், நோயாளிக்குச் செய்யவேண்டிய சிச்ருஷை, கர்ப்பிணி நடந்து கொள்ளவேண்டிய முறைகள், ஆரோக்கியமும் அழகும், வியாயாமம், விளையாட்டுகள், தொத்து வியாதிகள் ஆகிய இவைகளைப் பற்றி வியாசம் எழுதப்படுகின்றன. தாய்மார், உபாத்தியாயர், மாணுக்கன், ஆரோக்கிய பிரசாரகர்கள், குழந்தை இவர்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டிய விஷயங்களை இதில் காணலாம். ஆரோக்கிய தீபிகையை குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் உபயோக மாயுள்ள 'வீட்டு ஆரோக்கிய போதகர்' என்னலாம். எந்த பாஷையிலும் ரூபாய் 1—8—0க்கு இது கிடைக்கக்கூடியது.

இதை கத்தரித்து தபாலில் போடுங்கள்

ஆரோக்கிய தீபிகை மானேஜர்—தபாற்பெட்டி 166, சென்னை.

ஐயா,

நான் ஆரோக்கிய தீபிகைக்கு சந்தாதாரராகவிருக்க விரும்புகிறேன் தயவு செய்து என்னை............முதற்கொண்டு ஒரு சந்தாதாரராகச் சேர்த்துகொள்ளுங்கள். * இன்று ரூ. 1—8—0 மணியார்டர் மூலமாய் அனுப்பியிருக்கிறேன்.....................சந்தினகலை தயவு செய்து ரூ. 1—10—0க்கு வி. பி. மூலமாய் அனுப்புங்கள்.

முழுப்பெயர்.......................................................

தொழில்.......................................................

விலாசம்.......................................................

கையொப்பம் தேதி

* இதில் எது வேண்டியதோ அதை நிறுத்திக்கொண்டு மற்றதை அடித்து விடுங்கள்.

# THE AGRICULTURIST

*A monthly Journal devoted to Agriculture and its allied subjects*

# கிருஷிகன்

ஓர்மாதாந்தர விவசாயப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| Vol XII | 1929ம் ஹு டிசம்பர்மீ 15உ | No 9. |
| புத்தகம் 12 | சுக்கில ஹு மார்கழிமீ 1உ | பிரதி 9. |


## Some Researches made by the Ceylon Agricultural Department in green manuring of paddy crop.

## பசுந்தாள் உரம் நெல் பயிருக்கு இடுவதில் ஸிலோன் விவசாய டிபார்ட்மெண்டார் செய்த சில ஆராய்ச்சிகள்

நெல் சாகுபடி செய்யும் இடங்களிலெல்லாம் குழை. தழைகளை வயலில் வெளியிலிருந்து கொண்டுவந்து போட்டு மிதித்தும் நெல் வயல்களிலேயே பசுந்தாள் பயிர்களாகிய மொச்சை, பயறு, அவுரி, சடம்பு முதலிய பயிர்களை விதைத்து பின் அதிலிருந்துகிடைக்கும் தழை, குழைகளை எருவாய் உழுது மக்கவைத்தும் நெல் பயிர் நடுவதுண்டென்பது கிருஷிகர் எல்லொருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் சில கிருஷிகர் பசுந்தாள் எருவை நிலத்தில் போட்டு உழுது தொழியில் அழுகும்படி அனேக நாள் விட்டு அப்பால் அவ்வயலில் நாற்று நடுவதுமுண்டு. சிலரோ நிலத்தை உழுது தொழியாக்கி அத்தொழியில் குழை தழைகளை போட்டு மிதித்து உடனேயாவது அல்லது இரண்டொரு நாளைக்குள்ளாவது பயிர் நடுவதுமுண்டு. சிலரோ பசுந்தாள் உரம் பயிரிட்டோ நிலத்தில்போட்டோ உழுது மக்கவைத்து அதன் பின் அவ்வயலைக்காயவிட்டு அப்பால் புழுதி உழவு உழுது அதில் தண்ணீர் கட்டாமலே பதத்தில் நெல் விதைப்பதுண்டு. மற்றும் சிலர் மேல் சொன்ன பிரகாரம் தயாரித்து புழுதியாயிருக்கும் வயலில் தண்ணீர் கட்டி தொழியாக்கி அதில் நெல் சாகுபடி செய்யும் வழக்கமும் உண்டு. இப்படி செய்யும் முறைகளில் எது இலாபகரமானது என்றும் எதுகிருஷிகருக்கு ஜாஸ்தி நஷ்டத்தையுண்டு பண்ணாமல் பலன்கொடுக்கக்கூடியது என்றும் எதைக்கையாடக்கூடாதென்றும் இதுவரைபரிட்சைகள் திட்டமாய்செய்து தீர்மானங்கள்செய்யப்படவில்லை. ஸிலோன்விவசாய ரசாயன சாஸ்திரியும் அவரு

டையஷுசிஸ்டென்டும் இவ்விஷயத்தைக்குறித்துசில ஆராய்ச்சிகள் சமீபத்தில்செய்துவெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இவ்வாராய்ச்சிகள் நெல் சாகுபடி செய்யப்படும், ரீதியிலுள்ள மார்க்கமாய் நெல் பயிரை தொட்டிகளிலும், ஜாஸ்தி விஸ்தீரணமுள்ள வயல்களிலும் நட்டுபரிட்சைகள் செய்திருக்கிறதாகத் தெரிகிறது. கீழேகுறிப்பிட்டிருக்கும் விஷயங்களை யொட்டி இவ்வாராய்ச்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன:—

(1) நெல் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் குளை தழைகளை எருவாய் உபயோகித்தால் அது எவ்வளவு காலத்தில் மக்கி அப்பயிருக்கு உபயோகப் படுமென்றும் (2) அப்படி மக்கும் சந்தர்ப்பத்தில் என்ன ரசாயன மாறுபாடுகள் நிலத்திலும் அவ்வெருவிலும் உண்டாகிறதென்றும், அப்படி மக்கும் சமயத்தில் உண்டாகும் மாறுதல்களில் சம்பவிக்கும் எந்த வஸ்து உரமாக உபயோகப் படுகிறது வென்றும் (3) பசுந்தாள் எருவாய் உபயோகித்த குளை தழை குறைந்தது எத்தனை நாள்களில்தான் எருவாய் மக்குகிறதென்றும் ஆகையால் அப்படி உபயோகிக்கும் குளைதழை நெல்பயிர் செய்வதற்கு அநேக நாள்களுக்கு முன் நிலத்திற்கு உபயோகப் படுத்த வேண்டுமா அல்லது நெல் நடுமுன உபயோகித்தால் போதுமா என்ற விஷயத்தையும், (4) பசுந்தாள் உரத்தை நிலத்தில் பயிர்செய்து உழுதல் நலமா அல்லது வெளியிலிருந்து கொண்டுவந்து உபயோகித்தல் நலமா வென்ற விஷயத்தையும் இவ்வெருக்கள் நிலத்தில் மக்குவதால் உண்டாகும் மாறுதல்களினால் கிடைக்கும் சத்துக்களின் தாரதம்மியங்களை நிர்ணயித்தலிலும் (5) பசுந்தாள் உரத்தை நெல் சாகுபடியில் வெவ்வேறு தருணங்களில் உபயோகிப்பதால் கிடைக்கும் ஏற்ற தாழ்வு பலாபலன்களைநிர்ணயித்தலிலும் (6) அவைகளில் கிடைக்கும் மகசூல்களின் வித்தியாசம் எவ்வளவென்று கண்டுபிடிக்கவும் செய்யப்பட்டன.

இப்படி செய்த ஆராய்ச்சிகளிலிருந்து கீழ் குறிப்பிட்ட விஷயங்களைத் தெரிந்து கொண்டார்கள்:—

(1) நெல் பயிருக்கு வேண்டிய தழைசத்து வாகிய நைட்ரஜன் சத்து அம்மோனியா வென்று சொல்லப்பட்ட ரூபமாய்த்தான் பயிரால் உபயோகப் படுத்தப்படுவதாலும் அச்சத்து நெல்பயிருக்கு ஆரம்பம்முதல் கொண்டே வேண்டியதாயுமிருக்கிறதாகத் தெரிவதாலும் நெல் பயிருக்கு தழை சத்தைக் கொடுக்கக்கூடிய பசுந்தாள் எரு சரியானபடி நெல் பயிராகக்கூடிய நெல் வயல்களுக்கு ரெம்பவும் அவசிய மென்று நன்றாய்த் தெரிகிறது.

(2) நெல் வயல்களில் பசுந்தாள் உரசத்துகளாகிய தழை குழைகளை தொழியில்லாமல் பொடி உழவில் உழுது நிலத்தில் சேர்ப்பதினால் தழை சத்து நைட்ரேட் என்று சொல்லும் உப்பு ரூபமாய்த்தான் கிடைக்கிறதே ஒழிய முன் சொன்ன அம்மோனியா ரூபமாய் கிடைக்கிறதில்லையென்றும் அப்பேர்ப்பட்ட வயல்களில் பின்னால் தண்ணீர் கட்டி தொழி ஆக்குவதினால் நைட்ரேட்டு ரூபமாயுள்ள தழை சத்துள்ள நைட்ரஜன் சத்து தண்ணீரில் சுலபமாய் கரைக்கப்பட்டு தண்ணீரில் வடிந்து கழிந்து போகிறதென்றும் அப்படிக்கில்லையென்றாலும் அச்சத்து நைட்ரைட்டு என்னும் உப்புகளாய் மாறிப்போகிறதென்றும் அந்த நைட்ரைட்டு சத்து சற்று ஜாஸ்தி நிலத்திலிருந்தால் இளம் நெற்பயிருக்கு கெடுதலை உண்டு பண்ணுகிறதென்றும் தெரிகிறது.

(3) நெற்பயிருக்கு வேண்டிய நைட்ரஜன் என்னும் தழைசத்தை நிலங்களுக்கு தழை குழை போன்ற எருக்களை நடுமுன் உபயோகித்தால் அச்சத்தை ஜாஸ்தியாக்கவாவது அல்லது ஜாஸ்தியாய் நிலங்களிலிருக்கவாவது செய்யக் கூடுமென்றும் ஜாஸ்தி நார் சம்மந்தமுள்ள குழை தழைகளை நிலத்தில் எருவாக உபயோகப்படுத்தப்பட்டால் அவைகள் மக்க ஜாஸ்தி நாள் ஆகிறதால் அப்பேர்ப்பட்ட எரு வஸ்துக்கள் உபயோகிப்பதால் நஷ்டம் ஜாஸ்தி சம்பவிக்கிறதென்றும், ஆகையால் சுலபமாய் மக்கக்கூடிய தழை குழைகளை பயிர்நடும் ஒன்றிரண்டு நாள்களுக்குமுன் உபயோகித்தால் பயிர் நட அனேக நாள்களுக்கு முன் எரு உபயோகப்படுத்திப் பயிரிட்டதை விட ஜாஸ்தி மகசூல் கொடுத்திருக்கிறதாகவும் தெரிகிறது.

(4) குழை தழைகளை நெல் வயலுக்கு உபயோகிப்பதினால் எரு வாய்வுகள் உண்டாகும் மற்றுமித ஊடலங்களாகிய நிலத்துக்குள் காற்று புகச்செய்தல் வேர்களுக்கு காற்று உபகாரப் படும்படி செய்தல் முதலியவைகள் போன்ற விஷயங்களும், நெல் சாகுபடி யாவதற்கு அனேக நாட்களுக்கு முன் உரமிட்ட வயல்களில் குறைச்சலாகவே இருக்கிறதாகவும் தெரியவந்தது.

(5) நெல் வயல்களை புழுதியாயுழாமல் தொழியிலுழுது வைப்பதினால் தண்ணீரில் சுலபமாய் கரைந்து வெளிவோடிப் போகக்கூடிய தழை சத்தாகிய நைட்ரேட் என்னும் சத்து காணப்படுகிறதில்லையென்றும் தெரிந்தது.

மேல் சொன்ன விஷயங்களிலிருந்து பசுந்தாள் குழை தழை

எருக்களை தொழியில் நெல் நடுமுன் தான் உபயோகிப்பது சிலாக்கியமென்றும் அப்படிக்கில்லாமல் நெல் நடுவதற்கு அனேக நாட்களுக்கு முன்னால் வயலில் மிதித்து அல்லது உழுது மக்க வைப்பது அவ்வளவு சிலாக்கியகரமான பலனைக் கொடுக்காதென்றும் தெரிகிறது. இத்துடன் நெல்வயல்களை தொழியில் பயிர் செய்ய விரும்பினால் அவைகளை புழுதியில் உழுது காயப்போட்டு அப்பால் அதில் தண்ணீர் விட்டு தொழியாக்குவதில் கெடுதல் சம்பவிக்கிறதென்றும் தெரிகிறது. ஏனென்றால் அப்படி தயாரித்த வயல்களில் தழைசத்து நைட்ரேட்டு உப்பாய் சுலபமாய் தண்ணீரில் கரைந்து வெளிபோகக்கூடிய ஸ்திதியிலிருக்கிறது. இவைகள் பின்னால் தண்ணீர் கட்டி உழும்போது நஷ்டப்பட்டு விடுகிறது. ஆகையால் நெல் வயல்களை ஜாஸ்தியாய் உழவேண்டுமானால் அவைகளை சதாரணமாய் தண்ணீர் கட்டி உழுது அப்பால் தொழி காயாமல் வைப்பது சிலாக்கியமென்று தெரிகிறது. பசுந்தாள் உரப்பயிர்களை நிலத்தில் உரத்துக்காக விதைத்திருந்தால் அப்பயிர்களை நெல் நடும் அனேக நாட்களுக்கு முன்னமே அவ்வயலிலேயே உழுது மக்கவைத்து அப்பால் அதை புழுதியாய்க்காயவைக்கக் கூடாது. அப்படி பயிர்களை நிலத்தில் உழுது மக்கவைத்தால் அப்பேர்ப்பட்ட நிலங்களை காய விடாமல் தண்ணீர் கட்டி தொழியாகவே வைத்திருக்க வேண்டும். வெளியிலிருந்து கொண்டுவந்து உபயோகிக்கும் குழை தழைகளை எவ்வளவு நாள் பொருத்து வயலுக்கு தொழியில் உபயோகப்படுத்தக்கூடுமோ அவ்வளவு நாளைக்கு பின்தான் உபயோகிப்பது நலமென்றும் அப்படி செய்த தொழியையும் காய விடக் கூடாதென்றும் தெரிகிறது. பொதுவாய் நெல்பயிராகும் நிலங்கள் வடிகால் வசதியைப் பெற்றிருக்காவிட்டால் குழை தழைகள் அழுகி மக்கும்போது உண்டாகும் சில விஷ வஸ்துக்கள் பயிர்கள் நட்டு இழசாயிருக்கும்போது அவைகளுக்கு கெடுதலையுண்டு பண்ணுவதால் அப்படிப்பட்ட வடிகால் வசதி இயற்கையில் அமையப் பெற்ற வயல்களிலேயே நெல்பயிர் நல்லமகசூல் கொடுக்குமென்பதையும் மேல் சொன்ன விஷயங்களுடன் சேர்த்து கவனிக்க வேண்டியது அவசியம்.

திருநெல்வேலி ஜில்லாவில் போதுமானபடி புழுதி உழவு உழுது வைத்திருந்து தண்ணீர் பாய்ச்சும் அன்றே கொழை தழைகளைப் போட்டு மிதித்து அன்றே நடுவதும், இல்லாவிட்டால் கொழை குளிர்ந்து பயிர்வக்கரித்துப்போகுமென்றும் அனுபோகத்தால் கண்டுபிடித்து கையாடி வருகிறார்கள்.

# A WARNING

## ஓர் எச்சரிக்கை

**மின்சாரஉரம்:...**என்று தலையங்கமிட்டு கிருஷிகன் 12வது வால்யூம் 7ம் பிரதி 183ம் பக்கத்தில் நாம் எழுதியிருந்ததை நமது கிருஷிகனை வாசித்த நேயர்கள் மறந்திருக்க மாட்டார்களென்றே நம்புகிறோம்: சென்னை விவசாய டைரெக்டர் அவர்களுக்குக் கிடைத்த ஓர் சிறு அளவு மின்சார உரத்தை கோயம்புத்தூரிலிருக்கும் கவர்ன்மென்ட்டு ரசாயன சாஸ்திரியவர்களுக்கு அனுப்பி அந்த மின்சார உரத்தை ரசாயன கூறுபாடு செய்து பார்த்து அதில் பயிர் வளர்ச்சிக்கு இன்றியமையாத வஸ்துக்கள் என்னென்ன அடங்கியிருக்கிறதென்று பார்க்கச் சொன்னதின் பேரில், ரசாயன சாஸ்திரியவர்கள் அந்த உரத்தை அவ்வாறே ரசாயன கூறுபாடு செய்து பார்த்து பின் சொல்லும் ரிப்போர்ட்டை அனுப்பியுள்ளார்கள். நமது சந்தா நேயரின் பார்வைக்காக அதை இங்கு பிரசுரிக்கிறோம்.

### ரசாயன சாஸ்திரியவர்களின் ரிப்போர்ட்

ரசாயன ஆராய்ச்சிசாலை 1929-1930ம் வருஷத்திய நம்பர் 156

எனக்கு அனுப்பிய மின்சார எருவின் அளவு சரியானபடி எல்லா பரீட்சைகளும் செய்து பார்க்கப் போதுமான அளவு அனுப்பப்படவில்லை. சிதம்பரத்திலிருக்கும் ஷி ஆஸ்ட்ரேலியன் மின்சார எருவின் ஏஜன்ட்டாகிய ஸ்ரீமான் சிதம்பரம் அவர்களுக்கு அதிக அளவு எரு அனுப்பும்படி எழுதிய கடிதங்களுக்கும் பதில் இல்லை. பின் கடலூரிலிருக்கும் விவசாய டிமான்ஸ்ட்ரேட்டரை நேரில் சென்று பார்த்து ஷி எருவை வாங்கியனுப்பும்படி எழுதிய பிரகாரம் அவர் சென்று விசாரித்ததில் அந்த எஜென்ட்டின் இருப்பிடமாவது எங்கு சென்றார் எங்கு அவரைக் காணக்கூடும் என்று கண்டுபிடிக்க சாத்தியமில்லாமலிருப்பதாகத் தெரிவித்து விட்டார். ஆகவே அதிக அளவு எரு அகப்படாததால் இருந்த கொஞ்ச அளவு எருவை ஜாக்கிரதையாக உபயோகித்துப் பரீட்சித்துப் பார்த்ததில்

| | |
|---|---|
| கொளுத்தியதில் குறைந்தது நூற்றுக்கு | 98. 6 பாகம் |
| அநிந்திரிய வஸ்துக்கள் | 1. 4 பாகம் |
| மொத்தம் | 100. 0 பாகம் |

இதில் நைட்ரஜன் என்ற தழை சத்து 100க்கு 1. 35 பாகம் இருந்தது. பாஸ்பேட் என்ற தான்ய சத்தாவது, குளோரைட் என்ற உப்பு சத்தாவது இதர பயிருணவு சத்துக்களாகிய நைட்ரேட், சல்பேட் (கெந்தக சத்து) அம்மோனியம் (வெடியுப்புசத்து) அநேகமாய் இல்லையென்றும் இருப்பினும் வெகு கொஞ்சமாக இருப்பதாகவும்தெரிகிறது.

அந்த எரு பார்ப்பதற்கு நன்றாய்த் தான் செய்த சிலேட் வர்ணமாய் இருக்கிறது, அணுதர்சனிகண்ணாடியின் உதவியால் பார்த்தபோது ரொட்டி செய்யும்போது உபயோகிக்கும் ஈஸ்ட் என்னும் புளிப்பு வஸ்துவிலிருக்கும் வட்டக்கூடுபோன்றதான பெரிதும்சிறிதுமான இரண்டுவித கூடுகளைக் காணப்பட்டன. அதில் சில அணுக் கிருமிகளும் இருப்பதாகத் தெரிகிறது.

நாம் பார்வையிட்ட மின்சார எரு நன்றாய்த் தான்செய்த அழுகிய இந்திரிய வஸ்துக்களடங்கிய எருவுடன் சாதாரணம் காய்ச்சலுதில் எரியப்படும் கரிவஸ்துவும் கலந்திருக்கலாமென்று நினைக்கிறோம்.

என வைசாயன சாஸ்திரியவர்கள் எழுதியிருக்கிறார்கள், மேற்கண்ட ரிப்போர்ட்டிலிருந்தும், அந்த ஏஜண்ட் இருக்குமிடம் தெரியாமலே மறைந்து கொண்டிருக்கும் மின்சார எருவானது மின்னலைப்போல் மறைந்துவிட்டதென நினைக்கிறோம். மறுபடியும் எங்காவது மின்னலைப்போல் பிரகாசத்துடன் தோன்றுமாகில், மின்னலின் ஜோதியைக்கண்டு பிரமித்து ஏமாறாதிருக்கும்படி இன்னுமோர் முறை நமது சந்தா நேயர்களையும் பொதுவாக எல்லா கிருஷிகர்களையும் எச்சரிக்கிறோம்.

## Results of Demonstrations of Agricultural Improvements In the Madras circle carried out in 1924-1927; Compiled By M. R. Ry. Rao Bahadur D Ananda Rao and published by the Agricultural Department as Bulletin No 97 of 1929

## ஸ்ரீமான் ராவ் பகதூர் டி. ஆநந்தராவ் பி. ஏஸ்சி அவர்களால் தயாரித்து விவசாய டிபார்ட்மெண்ட் 1929ம் ௵த்திய புல்லெடின் நெம்பர் 97 மூலமாய் வெளியிட்ட 1924ம் ௵ முதல் 1927ம் ௵வரை சென்னை சர்க்கிளில் நடத்திய விவசாய சம்மந்தமான சீர்திருத்தங்கள்

1923ம் ௵த்தில் குடியானத்திலிருந்த சர்க்கார் விவசாயப்பண்ணைகளை எடுத்துவிடத் தீர்மானித்தபோது கிருஷிகருடைய நிலத்திலேயே அவர்களுடைய செலவிலேயே ஒவ்வொரு சர்க்கிளின் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு நிரூபணைப் பண்ணை ஸ்தாபிப்பதென்றும், டிபார்ட்மெண்டார் அப்பண்ணைகளின் சாகுபடி செய்யும் மார்க்கங்களில் மாத்திரம் ஆலோசனையும் உதவியும் கொடுப்பதென்றும் அப்பண்ணைகள் ஸ்தாபிதம் செய்வதில் இனமாய்க் கொடுக்கும் விலைக்கு வாங்குவோருடைய செ

லவிலேயே மேஸ்திரிஒருவரை டிபார்ட்மெண்டார் கொடுக்கும் ஆலோச சனையின்படி வேலை நடக்கிறதை மேல் பார்ப்பதற்கு வைப்பதென்றும் வரவு செலவு கணக்குகள் அக்கிருஷிகருடைய பார்வையில் எழுதப்படு வதோடு கடைசியில் அவை சரியான கணக்குகள் என்பதற்கு அக்கிரு ஷிகர் கையெழுத்தும் பெறுவதென்றும் 1924ம் வருஷத்திய G. O. No. 621ல் தீர்மானித்தார்கள்.

17844 சதுர மைல் விஸ்தீரணமுள்ளதும் 33 தாலுகாக்களை யுடையதுமான 4 ஜில்லாக்களிலிருந்து, அந்தந்த ஜில்லாவில் மத்தியி லிருப்பதும், அதிக நீர்வளம் நிலவளம் முதலானவை யில்லாததும், இயற்கை போக்கு வரத்துக்கு சௌகரியப் பட்டதுமுள்ள சுமார் 10 ஏக்கர் நிலத்தை இவ்வாறு விடுவதில் ஏற்படக்கூடிய இலாப நஷ்ட ங்களைப் பொருட்படுத்தாதவர்களும், சொல் சக்தியு முடையவர்களு மான பெரிய மிராசுதாரர்களுடைய நிலங்களைப் பார்த்து தேர்ந்தெடு ப்பது பெருங் கஷ்டமாயிற்று. மேற் சொன்ன எல்லா நிபந்தனை களுக்கும் ஏற்ற நிலங்கள் அகப்படாததால் செங்கல்பட்டு ஜில்லாவில் கடப்பாக்கம் ஜமீன்தாரவர்களாகிய ஸ்ரீமான் குமரப்ப ரெட்டியாரவர்க ளுக்குச் சொந்தமான மதுராந்தகம் தாலுகா மடுக்கரை என்ற கிரா மத்திலும், தென் ஆற்காடு ஜில்லா கள்ளக் குறிச்சி தாலுகா முடியனூர் கிராமத்தில் ஸ்ரீமான் ராவ் சாஹிப் குழந்தை வேலு உடையாரவர்க ளுடைய நிலத்திலும், குடியாத்தம் தாலுகாவில் சண்டத்தூர் கிராம த்தில் ஸ்ரீமான் சி. அப்பாதுரை முதலியாரவர்களுக்குச் சொந்தமான நிலத்திலும், காளாஸ்திரி தாலுகாவில் காலஞ்சென்றஸ்ரீமான் பனகால் ராஜா அவர்களுக்குச் சொந்தமான செர்போபள்ளி கிராமத்திலுள்ள நிலத்திலும், நிருபணைப் பண்ணைகள் ஸ்தாபிதம் செய்யப்பட்டன.

**நாட்டுப் பழக்கங்களும் விவசாயடிபார்ட் மெண்டார் பழக்கங்களும்**

உழவு:—நாட்டுக் கலப்பை கொஞ்சமாய்க் கீறிக்கொண்டு போவ தால் நஞ்சை நிலங்கள் சரியான தொழி யாவதற்கு அநேக முறை உழுவது அவசிய மாகிறதால், அதைவிட சற்று பெரிய இரும்புக்கல ப்பை கொண்டு உழுதால் ஷை இரும்புக் கலப்பை அகலமாய் உழுவ தால் ஓர் குறித்த நேரத்தில் நாட்டுக் கலப்பையை விட ஆழமாய் உழுவ தோடு, அதிக விஸ்தீரணமும் உழக்கூடுமென்றும், நாட்டுக் கலப்பை உழும் அத்தனை முறை இரும்புக்கலப்பையால் உழ வேண்டியதில்லை யென்றும், நேரில் உழுது பார்த்த குடியானவர்கள் இந்த இரும்புக் கலப்பை கொண்டு உழுவதில், நாட்டுக் கலப்பை கொண்டு உழுவதில்

மாடுகளுக்கு ஏற்படும் கஷ்டத்தளவு இல்லையென்றும் அபிப்பிராயப் படுவதால், இந்த இரும்புக் கலப்பை கொண்டு உழுவது தான் எல்லா விதங்களிலும் அனுகூலம் என நிரூபித்தார்களாம்.

எருவிடுதல்:—சாதாரணமாய் நஞ்செய் நிலங்களுக்கு தொழு எரு கொளை, கிலிச் சக்கை, முதலியன வாங்கி வந்துபோடுதல், புண்ணாக்கு கள் முதலிய எருக்கொடுத்தல் சாதாரண வழக்கம். தற்காலம் மேற் சொன்னவைகள் சாதாரணமாய் அகப்படாததாலும் கொளைவண்டி சுமார் ரூ. பதினைந்து விற்பதாலும் அதிககிராக்கியா யிருக்கிறது. அந்நிலங்களிலேயே பசுந்தாள் எருப் பயிர்களாகிய கொளுஞ்சி, தக்கைப்பூண்டு, அவுரி, சடம்பு முதலிய பசுந்தாள் பயிர்களைப் பருவத் தில் உழுது விதைத்து மடக்கி உழுவதால் தழை சத்து எருவாகிய நைட்ரஜன் என்னும் சத்தைக் கொடுப்பதோடு மண்ணையும் இளக வைக்கிறதென்பதையும் நிரூபித்தார்களாம்.

பசுந்தாளுடன் ரசாயன எருக்களைக் கலந்து கொடுப்பது சாதாரண கிருஷிகருடைய செலவை விட அதிக செலவாவதாகக் கூறுகிறார்கள். நாற்றுக்கு சல்பேட் ஆப் அம்மோனியாவை தண்ணீருடன் கலந்து பாயவிடுவதில் நாற்று நன்றாய் வளர்கிறதாம்.

நாற்றுவிடுதல்:—கிருஷிகர் 15 சென்ட்டு விஸ்தீரணத்தில் 20 முதல் 30 பக்காப்படி விதைகளை ஒரு எக்கர் நடுவதற்குப் பாவுகிறார்கள். இதனால் விதைகள் ஒன்றின் மேல் ஒன்றாய் விழுந்து போதிய இடமில்லாதிருத்தலால் நோய்ந்து சரியானபடி வளராததால் 10—15 நாற்றுகளைச் சேர்த்து நடவேண்டியதாகிறது, இதற்குப் பதிலாக 8 சென்ட்டு நிலத்தில் 8 பக்காப்படி விதை பாவுவதால் நாற்றுகள் வீரியமாயும் திடமாயும் வளர்வதால் 2—3 நாற்றுகளாகச் சேர்த்து நடுவது நல்லதென்றும் அவ்வாறு நடுவதால் நன்றாய்க் கிளைத்து மூடுகட்டி மணிபிடிப்பும் சிலாக்கியமாயிருக்கிறதாகக் கண்டு பிடித்தார்களாம். ஆனால் இவ்வாறு நடுவதில் வைக்கல் சற்று குறைவாகக் கண்டுமுதலாவதாகத் தெரிகிறதாம், நெல் வைக்கோலைவிட அதிக விலையுள்ள தானியமாகையாலும் அதுகண்டு முதல் அதிகம் ஆவதே இலாபகரமென்றும் ஆகையால் வைக்கோல் குறைவைப்பற்றி சிந்திக்க வேண்டியதில்லையென்றும் சொல்லுகிறார்கள்.

விதை தேர்ந்தெடுத்தல்:—கடைசியாக கிருஷிகர் விதை தெரிந்தெடுப்பதில் போதிய கவனம் செலுத்துவதில்லையென்றும் சில கிருஷிகர் மட்டும் விதைக்காகத் தெரிந்தெடுக்கும் நிலத்தின் ஒரு பாகத்தை வேறாக அறுத்து புணையல் அடிக்காமல் தலைபடி யடித்து சேகரிக்கிறார்களென்றும் இது போதாதென்றும் விவசாய டிபார்ட் மெண்ட்டாரால் தேர்ந்தெடுத்த ஜி. இ. பி, 23. கோ1. கோ2. ஆடுதுறை 1—2 முதலிய விதைகளை விதைப்பதினாலேயே 100க்கு 10 முதல் 15வரை அதிக மகசூல் கிடைக்கிறதென்றும் சொல்லுகிறார்.

நாட்டுக் கலப்பைக் கொண்டு உழுது மண் வெட்டியால் மஞ்சி கால்கள் இழுத்து ஏக்கருக்கு பதினையாயிரம் முதல் இருபத்தையாயிரம் நாட்டுக் கரும்பு புள்ளுகளை நட்டு புண்ணுக்கு எருக்கொடுத்து தோகை சுற்றி காற்றில் விழாவண்ணம் மூங்கில்கள் கொடுத்து கட்டி நாட்டு ஆலைகளில் சார் பிழிந்து கட்டைபோட்டு காய்ச்சி வெல்லம் செய்வதுதான் நாட்டு வழக்கம். சித்தூர், வட ஆற்காடு ஜில்லாக்களில் நல்ல கரும்பு சாகுபடி செய்யப்பட்டாலும் ஒவ்வொரு அம்சத்திலும் சீர்திருத்துதல் அவசியம் என டிபார்ட்மெண்டார் கண்டு பிடித்திருக்கிறார்கள். இரும்பு கலப்பை கொண்டு ஆழ உழுது, விக்டரி கலப்பை என்று சொல்லும் கலப்பை கொண்டு 3 அடிக்கொன்றாக மஞ்சி கால்கள் ஓட்டுவதால் 9-10 அங்குல அகலமுள்ள கால்கள் உண்டாவதாயும், மண்வெட்டியாலும் களைக்கொட்டுகளாலும் களைவெட்டுவதற்குப் பதிலாகக் கல்டிவேடர் என்னும் கலப்பைகொண்டு உழுவதால் களைகளை அப்புறப்படுத்துவதோடு பூமியிலுள்ள ஈரம் ரொவியாகாதபடி தடுக்கவும் ஹேதுஉண்டாகிறதென்றும், தோகைசுத்துவதால் கரும்புகள் சன்னமாவதோடு மழைத்தண்ணீர் இலைகளின் மத்தியில்நின்று கரும்புக் கணுக்களில் முளைகள் உண்டாவதாகவும் அதனால் வெல்லம் குறைவாய் அகப்படுவதோடு; அக்கரும்புகளை நட்டால் சரியாய் முளைப்பதில்லை யென்றும் சொல்லுகிறார்கள். டிபார்ட்மெண்டார் கரும்பு சாகுபடியில் செய்த சீர்திருத்தங்களிலெல்லாம் கிருஷிகருக்கு அதிக இலாபத்தைக் கொடுப்பதெது வெனில் சீர்திருத்திய அடுப்பைக் கட்டி அதில் கரும்பு சார்பிழிந்த சக்கைகளையும் தோகைகளையும்போட்டு எரித்து வெல்லம்காய்ச்சுவதில் கட்டை விலையே ரூ 50 முதல் 100 வரை குறைகிறதென்றும் சொல்லுகிறார்கள். வெல்லம்காய்ச்சும்போது அழுக்கைஅப்புறப்படுத்துவதால் பார்வைக்கு வெல்லம் அழகாய் இருப்பதால்சரக்கு நல்ல விலை பெறுவதாகவும் தெரிகிறது.

இஜ்ஜில்லாவிலுள்ள பெரும் பான்மையான புஞ்செய் நிலங்கள் மானுவாரி நிலங்களானதாலும், நீட்டமாய் பயிர் விளையுமென்ற நம்பிக்கையில்லாததாலும் போதிய அளவு எரு கொடுப்பதில்லை யென்றும், பயிர் மாற்றல் அநுசரிப்பதில்லை யென்றும் தெரிகிறது. தொழு எரு சேகரிப்பதில் கவனம் செலுத்துவதால் சிறந்த எரு சேகரிப்பதும் செய்து காட்டப்பட்டது. கொர்ரு கலப்பையால் விதை போடுவதால் ஒரு குறித்த நேரத்தில் அதிக விஸ்தீரணத்தில் விதை போட முடிவதோடு இரண்டு வரிசைகளுக்கு இடையில் ஏர் ஓட்டுவதால் களை வெட்ட வேண்டிய அவசியமில்லாததோடு, நிலத்திலிருக்கும் ஈரத்தையும் பாதுகாப்பதற்கு ஏதுவாகிறதென்றும் செய்துகாட்டப்பட்டது.

2 (தொடரும்.)

# ERRATA

மாடின்றி 2நபர் கைகளால் சுற்றி யிறவையாகும் கமலை 2 அமைத்தது. கிருஷிகன் 12வது வால்யம் 176ம் பக்கத்துடர்ச்சி

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 187 | 2 | 3 | கமலையே | கமலையோ |
| 187 | 4 | 2 | வருட ஆகரில் | வருடாங்கத்தில் |
| 187 | 4 | 5 | நன்றிறி | நன்றிகூறி |
| 187 | 4 | 3 | வாங்கி | வாங்கின |
| 187 | 6 | 2 | நிலைத்தடும் | நிலைத்துவிடும் |
| 187 | 6 | 3 | சக்கரத்தில் | வடஞ்சுற்றும் பின்சக்கரத்தில் |
| 187 | 6 | 3 | சுற்றும்பாது | சுற்றும்போது |
| 187 | 6 | 2 | மலை | கமலை |
| 188 | 1 | 2 | பிடியை | ஏசபிடியை |
| 187 | 5 | 1 | உபயோமுறை | உபயோகமுறை |
| 188 | 3 | 2 | சாவில்காரிய | சாவில்கோரிய |
| | 4 | 3 | சால் தருதல் | சால் தகரதல் |
| | 5 | 3 | கால்வு | காலவளவு |
| | 5 | 6 | அபயஸ்தங் | அபயாஸ்தங் |
| 187 | 6 | 1 | வால்வுதகடு | வால்வு காப்பு பிறைதகடு |
| 189 | 1 | 1 | உயாம் | உயரமும் |
| | 1 | 2 | வடிவமள்ளது | வடிவமுள்ளது |
| | | 4 | ஓரேதப | ஓரேதபா |
| | 2 | 3 | தருவிப்பட்டது | தருவிக்கப்பட்டது |
| | | 3 | ந்தகமயமைப்பு | அந்த கமலை யமைப்பு |
| 188 | 1 | 9 | இறவை | இறவை |
| 189 | 3 | 3 | சுற்று கமலை | சுற்றுக்கமலை |
| 189 | 3 | 5 | பகிழ்ச்சி | மகிழ்ச்சி |
| 189 | 3 | 4 | கழுயை | கமுடைய |
| 189 | 3 | 5 | வக்சாறு | வடக்சாறு |
| 189 | 3 | 6 | சிலாக்கித்தற்குரிய | சிலாகித்தற்குரியது |
| 189 | 3 | 7 | லாபந்தம | லாபந்தரும் |
| 189 | 3 | 8 | கனம்மற்றப் | கனமத்த |
| 189 | 3 | 9 | ஜேடி | ஜோடி |
| | | 9 | உ | உடவும் |
| | | 10 | ந | நலம் |
| | 4 | 2 | வாலாத | வாலில்லாத |
| | | 1 | ற்படும் | ஏற்படும் |
| 190 | 1 | 2 | மலைபெரும்லாபமும் | கமலை சாலால் பெரும் லாபம் |
| | 1 | 3 | றையை | முறையை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1 | 8 | தொத்து | தொகுத்து |
| | 2 | 2 | வகிறது | வருகிறது |
| | 2 | 3 | ழுமவோர் | ஒழுமேவோர் |
| | 2 | 4 | இஞ்சிஞவா | இஞ்சிஞழுவா |
| | | 6 | செய கஸ்ட | செய்து கஸ்ட |
| 190 | 2 | 3 | ழுமவோர் | ஒழுமேவார் |
| 190 | 2 | 6 | ஊரவ | டிரைவர் |
| | | 9 | பூழங்கு | முழங்கு |
| | | 9 | இஞ்சிஞைகை | இஞ்சிஞழுகை |
| | | 14 | மாலை | சாமாலை |
| | | 16 | ளிட்பது | ளிப்பது அ |
| | | 16 | கமலோல் | கமலைசால் |
| | 3 | 4 | வில் | விடில் |
| | | 4 | கெடமாட்டாது | சால்கெட மாட்டாது |
| | | 5 | தாக்க | தாக்கி |
| | | 5 | மேல் | மேல்விழுந்து |
| | | 6 | ஸ்டப்பவேது | கஸ்டப்படுவது |
| | | 11 | அந்த கம்புமுனைக்கு | அந்தக்கம்பு முனைக்கு |
| 191 | 1 | 2 | வட்டம் கோர்க்கும் | வட்டம் கோர்க்கும் |
| | 1 | 3 | கததாக | தக்கதாக |
| | | 4 | மலையிதில்ளில் | கமலை மிதிகல்ளில் |
| | | 6 | ஜஸ்தி | ஜாஸ்தி |
| | | 8 | ஜலப்பவும் | ஜலப்பழுவும் |
| | | 9 | நிரைப | நிரைபடி |
| | | 10 | லாமன்றே | லாபமன்றே |
| 191 | 2 | 1 | ருசபாஷையமும் | விருதுநகர் முதல் ருசபாஷையமும் |
| | | | அதன் பக்கத்ரா | அந்தேயிருந்து திருநெல்வேலி |
| | | | மங்களிலும் | ஜில்லா சங்காநயினர் கோவில் |
| | | | முகசால் | வரை 60மயில் தூரம் முக்குசால் |
| 191 | 2 | 2 | முழகிறது | வழுங்குகிறது |
| | | 2 | ட்டா | கெட்டா |
| | | 3 | ஆதுநா | அாலுநா |
| | 3 | 1 | கலை | கமலை |
| | | 2 | மலையிலும் | கமலையிலும் |
| | | 3 | க்குவதில் | தாக்குவதில் |
| | | 3 | வனிப்பாமாஞல் | கவனிப்போமானல் |
| 191 | 2 | 5 | வாரிதம செலவு வழையில் | வாரி செலவு தொகையில் |
| 191 | 3 | 7 | ஒமேறகால் | ஒன்றேகால் |
| | 4 | 2 | பித்து | பிடித்து |
| 192 | 2 | 3 | ளைவையாவதால் | யினவையாவதாக |
| | | 4 | பூமுருவுகும் | பூமுருவுக்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 7 | மது | நமது |
| | 3 | 3 | சாலிவை | சாலிரவை |
| 192 | 2 | 7 | வாஇள்ள | வாவில்லாத |
| 192 | 4 | 2 | ஆல் | ஆயில் |
| | 6 | 1 | மலே | கமலே |
| 193 | 2 | 2 | வந்து | வளேந்து |
| | 3 | 3 | கிறது | விடுகிறது |
| | 4 | 3 | தெரசுவிச்கினும் | தெரிவிக்கினும் |
| 193 | 4 | 5 | [illegible] வசிடமானது | யாககியமானது சால்பாய் கால்வளேத் தசமலேயிலமைந்த வாவில்லாத கமலே சால்தூக்கு நிலேயமிப்பில் சிக்குலதாசுஷியமா! |
| 193 | 4 | 8 | வளேயம் | சால்வளேயம் |
| 193 | 4 | 8 | நிலேதம்பி | நிலேகம்பியுடன் |
| 193 | 4 | 10 | [illegible] | கிணற்றை |
| | | 12 | அழுவுகொவ்வுப்படி | அழுவுக்கொவ்வப்படி |
| | | 14 | குறைவா பிருக் வேண்டும் | குறைவ பிருக்கவேண்டும் |
| | | 15 | குறையினும் | குறையினும் மிகுகினும் |
| 194 | 2 | 3 | நிலேம்பி | நிலேதம்பி |
| 194 | 2 | 7 | வளேயம் | சால்வளேயம் |
| 265 | 1 | 3 | ஆக $\frac{1}{8}$ | ஆக $\frac{5}{8}$ |
| | 2 | 4 | பொழிந்து | சாக்கிபொழிந்து |
| | 4 | 2 | தம்பி | தம்பியை |
| 266 | 3 | 8 | மீதினிற்பாதினும் | மீதினிற் பரம்பரை |
| 265 | 4 | 6 | கால்களை | கால்களை நிலேநிறுத்தப்படி கட்டையில் |
| 171 | | | படத்தில் 12லக்க மேகாய 2ன்மேல் வலப்புறம் சாய்வு கோடல் லக்கமிடாத்து | 2சாய்வு கோடில் 10 லக்கம் போடாம். இதுவே ஸ்டாண்டு கால்கள். |
| 172 | 1 | 1 | சா | சால் |
| | 3 | 1 | சக்காத்துடன் | சட்டம் பிரதிநிதி காங்கியுடன் |
| 175 | 10 | 1 | வா ஆருனேவா | வா ஆருனேவால் |
| 174 | 3 | 1 | கமலே நிதிகால் | கமலே மிதிக்கல் |
| | 1 | 1B | ஜலங் கோருந்தமர் | 168ம் பக்கம் அடியில் 2லக்ககமலே சால் அடியில் ஜலங்கோருந்தமர் போடவேண்டும் |

வே. ப. திருமலேயப்ப முதலியார்
வெள்ளகால்போஸ்ட்

# CORRESPONDENCE

## கடிதம்

ஸ்ரீமான் கிருஷிகன் பத்திராதிபர் அவர்களுக்கு இப்பவும் சித்தூர் ஒட்டு மாங்கன்றுகள் காய்ப்பில் சிறந்தவை யென்று கேள்விப் படுகிறோம். அது உண்மைதானா? அவ்வூரில் ஒட்டுமாங்கன்று வியாபாரம் பலர் செய்து வருவதாகவும் தெரிகிறது. இதனால் வியாபாரத்தில் யோக்கியமாயும், நம்பகமாயும், பழுதில்லாமல் காய்க்கும்படியான பக்குவத்தில் ஒட்டுகட்டி வியாபாரம் நடத்திவருகிற பல பேர்வழிகளின் விலாசம் நமக்குத் தேவையாக இருக்கிறது. அந்த பேர்வழியின் வியாபார தோரணை தங்களுக்குத் தெரிந்திருக்குமாதலால் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள நாம் விரும்புகிறோம், அப்பேர்ப்பட்ட வியாபாரிக்கு ஆர்டர் அனுப்ப தமிழில் எழுதலாமா? இங்கிலீஷில் தெரியப்படுத்தவேண்டுமா? எந்த பாஷையில் எழுதியனுப்பவேண்டும். அதையும் தயவுசெய்து தெரியப்படுத்த வேண்டும். மேலே கண்ட விஷயங்களுக்குத் தங்களுடைய விபரமான பதிலை மறுதபாலில் எதிர்பார்க்கிறோம். அதற்காக இத்துடன் ஒரு அணா தபால் முத்திரை அனுப்பி இருக்கிறது. தாங்கள் அனுப்பிய மால்டா எலுமிச்சம்பழம் இரண்டும்வந்து சேர்ந்தது அதன் விதைகளை தங்கள் பத்திரிகையில் கண்ட பக்குவப்படிக்கு போட்டிருக்கிறது.

இலந்தை பழத்தில் எந்த ஜாதிப்பழம் சிறந்தது. அதையும் தெரிவிக்கச் செய்யவேணும். இந்தப் பக்கங்களில் விருத்தியாக காய்க்கக்கூடிய பழவகை தினுசு எது என்பதை எழுதி யனுப்பவேணும்.

## பதில்

சித்தூர் ஜில்லாவில் அனேகர் ஒட்டு மாங்கன்று வியாபாரம் செய்கிறார்கள், நல்ல செடிகள் வேண்டுமானால் நம்பகமான இஷ்டர்கள் மூலியமாய்த் தான் வருத்த வேண்டும். பெங்களூர் சேலம் செங்கல்பட்டு ஜில்லாக்களிலும் ஒட்டுகட்டி செடிவிற்கும் வியாபாரிகளிருக்கிறார்கள். விஜயநகரம் முதலியஜில்லாக்களிலு மிருக்கிறார்கள். கிருப நேயருக்கு என்ன ஜாதி மாமரங்கள் தேவையென்று எழுதினால் அச்சாதிஎந்தஇடத்தில் அகப்படுமென்றும் அந்தந்த இடங்களிலுள்ளநம்பிக்கையானவர்கள் பெயர் விலாசம் குறிக்கக்கூடும், அவ்வியாபாரிகளுக்கு தமிழில் எழுதினால் போதுமானது.

இலந்தை பழச்செடிகள் ஒட்டுகட்டிய ஜாதி சிறந்தவைகள். பெங்களூரில்மெஸர்ஸ் ஒபலப்பாபிரதர்ஸ், தேவப்பாபிரதர்ஸ், ருத்ரப்பா அண்ட்சன்ஸ், முனிசாமி &சன்ஸ் முதலியோரிடம் கிடைக்கும். மேற்சொன்ன வியாபாரிகளெல்லாம் பெங்களூர் சிடி லால்பாக் சமீபத்திலிருக்கிறார்கள். ப. ர.

கனம் தங்கிய கிருஷிகன் பத்திராதிபர் அவர்கள் சமுகத்திற்கு.

சென்ற வைகாசி மாசம் தாங்கள் இக்கிராமத்திற்கு வந்து எங்கள் பழவ

ர்க்கத் தோட்டங்களையும் நஞ்செய் புஞ்செய் நிலங்களை எல்லாம் பார்வை யிட்டு இப்பக்கத்து மண் நிலக்கடலை சாகுபடிக்கு வசதியாயிருந்தும் அப்ப யிர் செய்யப்படாமலிருப்பதைப் பார்த்து பெரிதும் வருத்தப்பட்டு இனி மேலாவது என்னுடைய முயற்சியால் இப்பக்கத்தில் பயிர்செய்ய வேண்டு மென்று ஆக்ஞாபித்தீர்கள். அங்ஙனம் செம்மண்ணும் மணலும் கலந்த வடிகால் வசதியுள்ள 5 ஏக்கர் புஞ்செய் நிலத்தில் 600 வண்டி குளத்துவண் டல் அடித்து இப்பயிர் செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையும் இப்பக்கத் தில் இப்பயிர் செய்து அநுபோகமில்லாதபடியால் பின்னும் செய்யவேண் டிய பக்குவம் தெரியவில்லை. ஆகையால் மகசூல் அறுவடையாகும் வரை பின்னும் செய்யவேண்டிய பக்குவங்களையும் அறுவடை செய்யவேண்டியது எவ்விதமென்றும் இப்போது மானாவாரியாக பயிரிட்டாலும் ஜலவசதியாயிரு ப்பதால் மழை இல்லாவிட்டாலும் கிணற்று ஜலம் பாய்ச்ச வாய்க்கால் வரப்பு கள் அமைத்திருப்பதால் வாரத்திற்கோர் தண்ணீர் போதுமா என்ற விபரத் தையும் கிருஷிகன் வாயிலாகத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறு தென்னை மரங்களை வண்டுகள் கடித்து மரங்களைப் பழுதாக்கி யிருப்பதை பார்வையிட்டு உடனே சில வண்டுகளைக் குத்தி எடுத்துக்காண்பி த்தீர்கள். ஜாஸ்தியான மரங்களை அவ்விதம் குத்தி எடுப்பது கஷ்டமாயிருந்த படியால் கட்டுவரிசைப்படி மரங்களின் உச்சியில் கொஞ்சம் மணலைவிட்டுச் சொருகிக்குழாயும் சொருகி வைத்ததில் சொற்பகாலம்வரை கெடுதியில்லா மலிருந்தது. மீன் எண்ணெய் என்ற ஒரு மருந்து வண்டின் தொந்திரவுகளைத் தொலைத்து விடுமென்று சொல்லிவிட்டு மருந்துக்கு விலாசம் சொன்னீர்கள். அதின்படி எழுதினதில் மருந்து கிடைக்கவில்லை. தங்கள் மூலமாக மேல் படி மருந்தைத் தருவித்துக் கொடுத்தால் நலமாகயிருக்கும். கிரயத்தை முன்னுடியே அனுப்புகிறேன்.

இது நிற்க சொர்பரசமுள்ளதும் பெருமனுமான இலுமிச்ச பழம் தங்க ளிட மிருப்பதாகவும் மகசூல்காலம் அனுப்புவதாகவும் வாக்களித்தீர்கள். இப் போது மகசூல் காலமானதால் 2 பழம் அனுப்பும்படிக் கேட்டுக்கொள்ளு கிறேன்

தபால் செலவுக்காக 4 அணா ஸ்டாம்பு அனுப்பியிருக்கிறேன்

பிரான்சிஸ் ஜெவியர்
சேர்ந்தமரம்

## பதில்

வேர்க்கடலைப்பயிர் நாம் சொல்லி வந்த பிரகாரம் பயிர்செய்ய முய ற்சி எடுத்ததற்காக மெத்தவும் சந்தோஷம். அப்பிராந்தியத்தில் கிணற்றிறை வசதியுள்ளவர்கள் இதை இனி பொருட்படுத்திக் கையாளுவார்களென்ப

தற்கு தடையில்லை முதல் முயற்சி எடுத்தவர்க்கு தக்கபலன் கொடுக்குமாறு ஈஸ்வரனை வேண்டுகிறேன்.

இப்பயிருக்கு மழையில்லாத காலங்களில் அப்பிராந்திய மண்ணுக்கு வாரம் ஒருமுறை ஜலம் பாய்ச்சினால் போதுமானது. காற்று ஜாஸ்தியாய் அடித்து நிலம் வரண்டு போகாமல் மேல் மண்ணை அப்போதைக்கப்போது கொத்திக் கொடுத்தால் ஜலம் அடிக்கடி பாய்ச்சவேண்டிய அவசியமும் நேரிடாது. இப்பயிர் விதைத்து செடி எழும்பிய ஒரு மாதத்தில் முதல் களை வெட்டவேண்டும் அப்பால் ஒரு மாதம் கழித்து மற்றொரு களை வெட்டினால் போதும், இது மண்வெட்டிகளால் வெட்ட முடியாது. ஆகையால் களைகளை கொட்டுகளால் வெட்டுவது நலம். முதல் களை எடுக்கும்போது கூட செடிகளுக்கு நடுவே இடைவெளி இருந்தபோதிலும் கைக்களை கொட்டுகளால் களை எடுப்பது நலம். ஒவ்வொரு தரம் களை எடுக்க ஏக்கர் ஒன்றுக்கு 16 பெண்களுக்குள்ளேயே தான் செல்லும். தண்ணீர் கட்டான போது ஜலம் பாய்ச்ச வேண்டியதே தவிர வேறு வேலை அப்பால் செய்ய வேண்டியதில்லை.

வேர்க்கடலையில் அனேக ஜாதிகளுண்டு. சில படரும்; சில குத்து செடிகளாக இருக்கும். படரும் ஜாதிகள் விதைத்திருந்தால் இரண்டாவது களை வெட்டும்போது படர்ந்த கொடிகளை மண்ணில் சாய்த்து அதன்மேல் கொஞ்சம் மண் போட்டு கொடிகள் பூமியை ஒட்டியே ஓடும்படி செய்வதுண்டு. இப்படி செய்வதால் கொடிகள் கணுக்களில் விடும் காய்வேர்கள் பூமியில் தாராளமாய் இறங்கி காய்பிடிக்கும். குத்து ஜாதிகளுக்கு இந்த பருவம் செய்யவேண்டியதில்லை.

பற்பல ஜாதிகள் முற்றித் தோண்டுகிறதற்குப் பிடிக்கும் நாள்கள் வித்தியாசப்படும். ஸ்பானிஷ் ஜாதி நூறு முதல் நூற்றுபத்து நாள்களில் முற்றும். சாதாரண மோரிஸ் ஜாதி முற்றி எடுக்க விதைத்து ஆறு மாதம் பிடிக்கும். சாதாரண காலத்தில் முதல் தரம் பூத்து காய்க்கும் காய்கள் 4 மாதத்தில் முற்றி அறுவடைக்கு லாயக்காகும். அப்பால் இரண்டாவது விடும் காய்கள் 5 மாதத்திலும் 3ம் தரம் விடும் காய்கள் 6 மாதத்திலும் முற்றும். விதைத்து 4-வது மாதம் முதல் கொண்டு 6வது மாதம் முடிய மோரிஸ் ஜாதி அறுவடை செய்வார்கள். 4வது மாதம் முந்தி அறுவடை செய்யும்போது மகசூல் சற்று குறைச்சலாயும் விதைத்து 6 மாதம் பொறுத்து அறுவடை செய்தால் மகசூல் ஜாஸ்தியாயும் கிடைக்கும். 4 மாதத்தில் முற்றிய காய்கள் பூமிக்குள்ளேயே கெடாமலிருந்து விதையாய் உபயோகப் படுத்தக்கூடியதாயிருக்கும். இலைகளின் மேல் தோல் சற்று கறுப்புநிறமுடையதாயிருக்கும், லேசாய் பொறுக்கிப்பிரித்து வைத்துக்கொள்ளக்கூடும். தோண்டி எடுத்து சாதாரணமான மண்வெட்டியால் கொத்தி பார்த்திருக்கும் செடிகளிலிருந்து காய்களை பொறுக்கிக்கொண்டு செடிகளையும் கொடிகளையும் மாட்டுத் தீவனத்திற்கு [illegible]

கும் உபயோகப் படுத்துவதுண்டு. செடிகளை அப்புறப்படுத்தியபின் நிலத்தை ஒன்றிரண்டு தரம் சாட்டைக்கலப்பையால் கிளறி அதிலிருக்கும் காய்களையும் பொருக்கி எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஒரு ஏகராவில் செடிகளை வெட்டி அப்புறப்படுத்த 15 ஆண் கூலிகளும் 75 பெண்களும் தேவையாயிருக்கும்; இதற்கு மேல் செல்லாது. இப்பயிர் செய்வதில் பிடிக்கும் ஜாஸ்தி செலவு வெட்டி எடுக்கும் செலவுதான். ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து 1000 பட்டணம்படி முதல் 5000 பட்டணம்படி கடலை வரை செய் நேர்த்தி முதலிய பருவங்களுக்குத் தக்கபடி கிடைக்கும். ஒரு சதுர கெஜ விஸ்திரணத்தில் ஒரு பக்காபடி கடலை கிடைத்தால் அது நல்ல விளைவென்று எண்ணவேண்டும்.

தென்னை மரவண்டுகளை நாசப்படுத்தக் கூடுமென்று நான் சொன்ன மருந்தின் பெயர் மீன் எண்ணெய் சோப்பு. மீன் எண்ணெய் அல்ல. மீன் எண்ணெய் சோப்பு டைரெக்டர் ஆப் பிஷரீஸ் சேபாக் சென்னை மூலமாய் வருவித்துக் கொள்ளலாம். அவர்களுக்கு எழுதிக்கொள்ளவும் இத்துடன் கோயம்புத்தூரிலுள்ள கவர்ன்மெண்ட் எண்டமாலஜிஸ்ட் அவர்களுக்கும் எழுதவும் இவர்கள் கட்டாயம் தருவித்துக் கொடுப்பார்கள். இவர்களுக்கு எழுதிக் கிடைக்காவிட்டால் நான் தருவித்துக் கொடுக்கிறேன். வி. பி. போஸ்டில் அனுப்பும்படி எழுதினாலும் அனுப்புவார்கள். தங்களுக்கு ஏராளமான விஸ்திரணத்தில் தென்னந் தோப்புகளிருப்பதாலும் வருஷம் தோறும் வைத்துக்கொண்டேயிருப்பதாலும் பத்து ஐம்பது ராத்தல் மீன் எண்ணெய் சோப்பு ஒரே தடவையில் தருவித்துக் கொள்வது நலமென்பது எமது அபிப்பிராயம். ப. ர.

எலிப்பொறி ஐயவிஞ எலியழிவு வேறு முறை

கிருஷிகன் பனிரெண்டாம் வால்ம் 167ம் பக்கம் செந்நிரழிவு பரிகாரம் பேசியுள்ளது. அதில் கூறும் பம்பும் மருந்தும் அமைபுமிடமும் கூறவில்லை, பம்பு வில்லை, மருந்து வில்லை, ஒரு அவுன்சு மருந்து எத்தனை அடி நீளம் எலிவளையை பழிக்குமென்ற விபரம் தெரிவிக்கும்படி வேண்டுகிறோம்.

திருநெல்வேலி ஜில்லாவில் வாழைப்பழம் பழுக்க வைக்க அனுசரிக்கும் முறைப்படி 2 அடி சதுரம் 2 அடி தனிக்குழி வெட்டி வாழை சருகு போட்டு காயை வைத்து சருகால் மூட்டம் போட்டு மண்ணால் மூடப்படும்.

2 படி ஜலம் கொள்ளும் மண் பாண்டத்தில் வாழை சருகு காய்த்ததை உள் வைத்து கலயத்தாரில் ஒரு அங்குல தமர் போட்டு மண் மூட்டம் போடும் முன் கலயவாய் மூட்டம் மேல் படும்படி வைத்து ஸ்திரப்படுத்தவும்படும். கலயத்தார் தமரில் அக்கினி வைத்து சிறிது நேரம் ஊதவே 3 பொழுதில் பழம் பழுக்கும். அம்மாதிரி எலிவளையில் செய்யலாம்.

வே. ப. திருமலையப்ப முதலியார்

# பதில்

எலியழிவைக் குறித்து முன் சஞ்சிகையில் எழுதிய பம்பு சைனகாஸ் பம்பு என்று பெயர். இதில் இரண்டுதரமிருக்கிறது. பெரியதரம் ஒன்று அதைவிட சின்னதரம் ஒன்று. ஸ்ரீமான் வெங்கடராம ஐயர் ஆடுதுறைநெல்பண்ணையில் உபயோகப் படுத்திய பெரியதரத்தின் விலை ரூ முப்பது. சின்ன தரத்தின் விலை ரூ இருபது. இப்பம்புகள் சென்னை ஷாவாலேஸ் கம்பனியாரிடம் கிடைக்கும். அவர்கள் விலாசம் போஸ்டு பாகஸ் நெம்பர் 14 சென்னைப்பட்டணம்.

அவர்களே அந்த பம்பில் உபயோகிக்கும் மருந்தையும் விற்கிறார்கள். இம்மருந்துக்கு சையனோ காஸ் ஏ, டஸ்ட் என்று பெயர். இதன் கிரயம் நூறு

| | | | |
|---|---|---|---|
| ராத்தல் பீப்பாய்களில்வாங்கினால் ராத்தல் ஒன்றுக்கு | 1 | 4 | 0 |
| 25 இராத்தல் டின்களில வாங்கினால் இராத்தல் 1க்கு | 1 | 8 | 0 |
| 10 இராத்தல் டின்களில் மேல்படி மேல்படி | 1 | 10 | 0 |
| 5 இராத்தல் டின்களில் வாங்கினால் | 1 | 12 | 0 |

ரெயில் சார்ஜ் பிரத்தியேகமாகும்.

நிருபகேயர் எத்தனை யடி நீளம் எலிவளையை யழிக்குமென்று விபரம் கேட்கிறார். இது சாதாரணமாய் சொல்லமுடியாது. சொல்வதிலும் பயனில்லை. ஏனென்றால் எல்லா எலிவளைகளும் ஒரே விதமாய்த்தான் இருக்கிறதென்ற நிச்சயமில்லை. அவைகள் ஒரேவித நிலத்தில் எலிகளால் அமைக்கப் பட்டிருக்கவில்லை. எலிவளைகளைத் தோண்டிப்பார்த்து அனுபவமுள்ளவர்களுக்கு அது நன்கு விளங்கும். வெவ்வேறு வித ஜாதி எலிகள் வெவ்வேறு விதமாய் அவைகளின் இருப்பிடத்தை அமைத்திருக்கும். இடம் விசாலமாய்க் கிடைக்கும் கழனிகளைப் போலொத்த இடங்களில் நீளம் ஜாஸ்தியாயிருப்பது பார்த்திருக்கிறோம். இடம் சுருக்கமாய் கிடைக்கும் இடத்தில் ஆழம் ஜாஸ்தியாயிருப்பதை நாம் அனுபவத்தில் பார்த்திருக்கிறோம். ஆகையால் எலிவளை நீளத்தையாவது ஆழத்தையாவது குறிக்கப்பெறுவது சரியல்ல. எலிகளை தோண்டிப்பார்த்தவர்களுக்கு அவ்வளைகள் எப்படி சுற்றி சுற்றி அமைக்கப் பட்டிருக்கிறதென்றும் சில வளைகளில் இரண்டு வாசல்கள் அமைக்கப்பட்டிருக்க சில வளைகளில் ஒரே வாசல்தான் அமைக்கப்பட்டுள்ளதென்பதும் நன்கு விளங்கும். எலிகள் மகா தந்திரசாலி ஜீவன்கள் ஆனதால் அவைகளின் வளைகள் சுற்றிச்சுற்றிப் போய்க்கொண்டிருக்க அவைகள் இருக்கும் இடம் பந்தோபஸ்தாய ஒரு புறம் [illegible] குணமுடையது. ஆகையால் ஸ்ரீமான் வெங்கடராமையர் அவர்கள் எழுதியிருக்கும் குறிப்பில் வளையின் நீளத்தையாவது ஆழத்தையாவது குறிக்கவில்லையென்பது எமது அபிப்பிராயம். ஆனால் அவர்கள் எத்தனை எலிவளைகளில் மருந்தை பம்பு செய்தார்களென்றும் அதற்கு எவ்வளவு மருந்து செலவாயிற்றென்றும் அதில் எத்தனை எலிகள் பிடிபட்டிருக்கின்றன

றும் கூறி யுள்ளார்கள். அரை இராத்தல் ஸைனேகாஸ் ஏ. டஸ்ட்மருந்து உபயோகித்ததில் 58 எலி வளைகளுக்குப் போதுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள், ஒவ்வொரு எலிவளையிலும் 12 தரம் பம்பு இழுத்து அடித்தல் போதுமான தென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு எலிவளைக்கும் 12 தரம் பம்பு இழுத்து மருந்து உள் செலுத்தினால் அவ்வளை எவ்வளவு ஆழமானதாயும் நீளமானதாயுமிருந்தாலும் போதுமென்று புலப்படுகிறது. இப்படி 58 எலிவளைகளில் உபயோகிக்க அரைராத்தல் மருந்து போதுமானது.

1927ம் வருஷத்தில் ஆகஸ்டு மீ 13முதல் கொண்டு செப்டம்பர் மீ 17உக்குள் 131 எலிவளைகளுக்கு மருந்து உபயோகித்ததாகவும் அதற்கு ஒரு இராத்தல் 2 அவுன்ஸ் மருந்து சிலவானதாகவும் அந்த பம்பு அடித்த நேரம் எல்லா நாட்களையும் கணக்கிட்டுப்பார்த்தால் மொத்தத்தில் 16 மணி நேரம்தான் ஆயிற்றென்றும் மருந்துசிலவும் ஆள் சம்பளம் உள்பட 131 வளைகளில் மருந்து உபயோகிக்கப்பிடித்த சிலவு ரூ 2—13—6 ஆயிற்றென்றும் அதில் மாண்டிருக்கக்கூடிய எலிகளின் எண்ணம் 65க்கு குறைவில்லையென்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். இதே 65 எலிகளைப்பிடிக்க வேண்டுமானால் எலி ஒன்றுக்கு 1 அணா வீதம் தஞ்சை வாசிகள் கொடுப்பதால் ரூ 4க்குமேல் ஆகிறதென்றும் இதுவன்றி எலிபிடிக்க தோண்டியவளைகளை மூட அப்பால் வேறு ஆட்கள் தேவையானதால் இம்மருந்து பம்பு உபயோகித்தல் அனேக விதத்தில் அனுகூலமென்றும் எழுதியிருக்கிறார்கள்: ஒரு எலிவளையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட நெல்சுமார் பத்து பட்டணம்படி வரைக்கும் இருக்கிறதென்று தெரிகிறது. வேர்கடலை முதலிய சாகுபடிகளில் இவ்வெலிகளின் அழிவு கணக்கிட இடமிராது.

நிருபநேயர் குறிக்கும்முறை அனேக ஜில்லாக்களில் எலி பெருச்சாளி போன்ற ஜெந்துக்கள் பிடிக்க உபயோகிக்கப்படுகிறது. இதைவிட சுலபமான முறை வளைகளில் தண்ணீரை ஊற்றிக்கொண்டு வந்தால் வளையில் தண்ணீர் ரொம்பி எலிமூச்சுப் பிடித்தவுடன் எலிகள் வெளி வரும்போது அவைகளை அடித்துக் கொல்லலும் ஒன்று. இப்படிச்செய்யும்முறைகளில் எது சிலாக்கியமானதென்றும் எதைக் கையாடுதல் திறமென்றும் சகாயம் என்றும் அந்தந்த இடங்களுக்கு ஏற்றவாறு சந்தாநேயர்களே கவனித்து அனுசரிக்க வேண்டும்.

ப. ர.

1. இதற்கு முன் சுமார் 15 நாளைக்கு முன் அடியில்கண்ட விஷயங்களைக் குறித்த தங்களுக்கு ஒரு கவர் எழுதிப் பதிலுக்காக ஒரு அணாஸ்டாம்பும் அனுப்பியிருக்கிறேன். அதற்கு நாளதுவரையில் பதில் கிடைக்கவில்லை. ஆகையால் என் லெட்டர் தங்களுக்கு கிடைக்கவில்லை என்று சந்தேகித்து இந்த லெட்டர் எழுதினேன். அதற்காவது அவசியம் மறுதபாலில் கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளித்து என்மனோபீஷ்டத்தைப்பூர்த்தி செய்விக்க

வேணுமாய் ரொம்பவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

2. தவிர நாளது ஐப்பசிமாத சஞ்சிகையில் மால்டா எலுமிச்சை பழம் அனுப்புவதாக எழுதி இருந்தது. ஆனால் அதில் ஒரு வாரத்திற்குள் எழுதவேணுமென்று இருக்கிறது எனக்கு 24உ தான் சஞ்சிகை கிடைத்தது ஆகையால் இத்துடன் அனுப்பியிருக்கும் 4 அணா ஸ்டாம்பைப் பெற்றுக்கொண்டு நான் வெகு நாளாய் எதிர்பார்க்கும் தங்களை கேட்டிருந்த அந்த பழத்தை அவசியம் அனுப்பிக்கவேணும்.

a. நான் ஒட்டுச்செடிகளுடன் வெண்டை கொத்தவரை, கத்திரி, சேம்பு, கருணை போட்டிருக்கிறேன். அதில் வெண்டை செடியின் இலைகள் ஓட்டைப்போல் ஒட்டிக்கொண்டு இலை சுருட்டிக் கொள்ளுகிறது. அதற்கு என்ன மருந்து உபயோகித்தால் குணமாகி வீரியமாய்க் காய்க்கும்?

(b) கம்பளிப்பூச்சி போன்ற ஒரு சொரசொரப்பான பூச்சி தோட்டம் முழுதும் பரவி இலைகளின் பச்சையை போக்கடித்து உலர்த்திவிடுகிறது.

(c) மக்கா சோளத்தில் ஆண்கதிரில் அசணம் போல் பிடித்து அதற்காக எறும்பு மொய்த்து பாழாக்குகிறது.

(d) பாகல் செடிக்கு மஞ்சள் சிறப்பூச்சி பரவி இலைகளையும் கொடிகளையும் உலர்த்தி விடுகிறது.

(e) கத்திரிச் செடியின் முனையில் வெள்ளைப் புழு விழுந்து துளை செய்து செடியை வளர வொட்டாமலும் காய்கள் பிடிக்காமலும் பாழாக்குகிறது.

(f) குளவி போன்ற வண்டு அனேகமாய் சப்பாத்தி கள்ளிப்பூவில் பார்த்திருக்கிறேன். பூக்களை உதிர்க்கச் செய்கிறது. மேல்கண்டவைகளுக்கு என்னென்ன சிகிச்சை செய்தால் அவைகள் நிலையும்?

3. தவிர நான் தங்களைக் கேட்டுக் கொள்ளுவது யாதெனில் தங்கள் சஞ்சிகையில் ஒரு பக்கமாவது பூச்சி புழுக்களைப்பற்றி வியாசம் எழுதினால் அனேக ஏழைகளுக்கு உபகாரமாயிருக்கும்.

4. மலையாளம் முதலியபல இடங்களில் நல்ல ஜாதிபலாப்பழம் விதைக்காக அகப்படுமென்று புரட்டாசி மாத சஞ்சிகையில் தெரிவித்தீர்கள் எனக்கு அறிமுகமான மனுஷியாளும் அங்கு கிடையாது. விற்பவர்கள் பெயரும் தெரியாது. ஆகையால் தங்கள் மார்க்கமாகவே பழமாவது அல்லது செடியாவது வரவழைத்துக் கொடுக்க சாத்தியமாகுமா? சார்ஜ் என்னபிடிக்குமோ எழுதினால் அனுப்புகிறேன்.

5. அடியில் கண்டவை அகப்படும் விலாசம் எனக்கு தெரியப்படுத்த வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(a) ஜிப்சம்

(b) சாலிஞ நெல் விதைக்கும் காலம் புழுதி அல்லது சேடையிலா? ஒரு ஏக்கருக்கு எவ்வளவு விதை?

(c) பொதட்டூர் பச்சைபயறு ஷை

(d) பர்மா மொச்சை ஷை

(e) மார்கழி மாதத்துக்கு மேல் விதைக்கும் என்ணுவிதை.

(f) சத்திரி ஜாதியில் சிரேஷ்டமான தம்லபசராணைதயான ஜாதிவிதை எங்கு அகப்படும்?

(g) அலகோடி காவல் பழச்செடி

(h) பப்பிளிசெடி

(i) பாபூல் மரம்

(j) கொணுஞ்சிவிதை

(k) சப்பாத்தி கள்ளியை முள் எடுக்காமல் எருவாக்க முடியுமா? எப்படி?

இந்த சமயம் தங்களுக்கு அதிக சிரமத்தைக் கொடுத்து விட்டதற்காக மனதில் கஷ்டம் வைத்துக் கொள்ளாமல் மன்னிப்பீர்களாக.

ஸ்ரீனிவாச ராகவாச்சாரி.

## பதில்

பயிர்களுக்கு தாக்கும் புழு பூச்சி பாதை நோய் கொடியால் உண்டாகும் கஷ்டத்தைக் குறித்து அநேக சந்தாநேயர்கள் கேள்விகள் கேட்கிறார்கள். இதற்கு தக்க ஜவாபு அளிக்க சாத்தியப்படவில்லை. ஏனென்றால் பயிரைப் பீடிக்கும் பூச்சியோ நோயோ இன்னது தானென்று திட்டமாய் அறிந்து கொள்ள மார்க்கமில்லை, ஒரே பூச்சிக்கு பல இடங்களில் பல பெயர்களிட்டிருக்கிறார்கள். பாதைப்பட்ட பயிரோ செடியோ அநேகமாய் பலவித பாதைகளாலும் ஒரே விதமாய் கெடுதலடைந்ததைப்போல் சாதாரண ஜனங்களுக்குப் புலப்படும். நிபுணர்கள் இவைகளுடன் ஊடாடி அநுபவம் பெற்றிருப்பதால் ஒரு நிமிஷத்தில் இது இன்னது தானென்று பார்த்த மாத்திரத்தில் தெரிந்து சொல்லும் சக்தி அவர்களுக்குண்டு. சில பூச்சிகள் கெடுதி செய்யும் பூச்சிகளைத் தின்னும். அவை பயிர்களில் ஏராளமாய் காணப்படும். அப்பேர்ப்பட்ட பூச்சிகள் தான் பயிரைக் கெடுக்கிறதாக தப்பு அபிப்பிராயப்பட்டு அப்பூச்சிகளைக் கொல்ல முயலுவதுண்டு; திருஷ்டாந்தமாக மரங்கொத்தி குருவி, மரத்தைக் கெடுக்கும் பூச்சிகளைத் தின்பதற்காக மரத்தைக் கொத்தி துவாரம் செய்து உள்ளிருக்கும் பூச்சிகளைத் தின்று செடிக்கு நன்மை செய்கிறது. சாதாரணமாய் அவைகள் செடிகளைக் கொத்திக் கெடுப்பதாக தப்பபிப்பிராயங் கொண்டு அவைகளைக் கொல்லுகிறார்கள். ஆகையால் பூச்சிபாதைநோய் கொடிகள்பாதையைக் குறித்து பரிஷ்காரமாய் விவரந்தெரிந்துகொள்ள விரும்பினால் அவர்கள் பாதைப்பட்ட பயிரையும்பாதைப் படுத்துகிறதென்று சந்தேகிக்கும் புழுமுதலியவற்றையும் நேரிசாவிலாவது வலை

யடித்து தகர கூண்டிலாவது சேகரித்து கோயம்புத்தூர் விவசாய சோதனை மண்டபத்தில் வேலைசெய்யும் பூச்சி சாஸ்திரியவர்களுக்கும்பூஞ்சாண சாஸ்திரியவர்களுக்கும் மாதிரியனுப்பிவிவரம் கேட்டால் அவர்கள் அவ்விஷயத்தை நிரப்பரி சோதனை செய்து பார்த்து அது என்ன காரணத்தால் உண்டாயிற்று அதற்கு என்னமாதிரி சிகிச்சை செய்தால் அனுகூலமுண்டாகுமென்றவிஷயங்களை விவரமாயும் தெளிவாயும் இலவசமாயும் எழுதி யனுப்புவார்கள் இவ்வுத்தியோகஸ்தர்களை நமது காருண்ய கவர்ன்மெண்டார் விவசாயிகளுக்கு வுதவி புரிந்து அனுகூலம் செய்யும்படிக்கே நியமித்திருக்கிறார்கள். நாம் அவர்களுக்கு தகவல் கொடுத்து தெரிந்து கொள்ளாதது நமது தப்பே தவிர வேறொருவருடையதல்ல.

ஒவ்வொரு வருஷம் பிரசுரமாகும் கிராம வாசிகளின் பஞ்சாங்கத்தில் புழு பூச்சிகளால் ஏற்படும் சேதத்தைப்பற்றியும் பரிகாரம் செய்வதிலும் அப்பூச்சிகளை பரிக்ஷைக்கு அனுப்புவதிலும் கவனிக்க வேண்டிய விஷயங்களைக் குறித்து விவரமாய் எழுதப்பட்டிருக்கிறது. இக்கிராம வாசிகளின் பஞ்சாங்கத்தின் விலை ஒரு அணாதான். அதில் கிருஷிகருக்கு உபயோகப்படக் கூடிய அநேக விஷயங்களும் எழுதப்பட்டிருப்பதுடன் பஞ்சாங்கமும் அச்சிட்டிருக்கிறது.

பழ பூச்சிகளைக் குறித்து சமயகாலமிருக்கும்போதெல்லாம் முக்கிய விஷயங்களை எழுதிக் கொண்டுதான் வருகிறோம். தனிப்பூச்சிகளைக் குறித்து விபரம் இக்கடிதத்தில் முதல்பாகத்தில் சொல்லி யிருக்கும் விஷயங்களைக் கவனித்து எழுதக் கூடவில்லை. அப்படி எழுத வேண்டுமானால் பூச்சிகளின் உருவப்படங்களுடன் எழுதினால் தான் எல்லாராலும் அறிந்து கொள்ளமுடியும். உருவப் படங்கள் அச்சிட வேண்டுமென்றால் செலவு ஜாஸ்தியாகும். சந்திரிகையின் சந்தாவுக்குக்கட்டாது.

பலாப்பழம் மலையாளத்திலிருந்துதான் வருவிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மற்ற இடங்களிலும் கிடைக்கும். நேயருக்கு வேண்டுமானால் தென் ஆர்காடு ஜில்லா பண்ருட்டிக்கடுத்த பலாப்பட்டு கிராமத்தில் சவுபமாய் பலாப்பழ காலங்களில் வாங்கலாம். விலை பழம் ஒன்றுக்கு ரூ 1½க்கு மேல் போகாது. ரயில் சார்ஜ் பிரத்தியேகமாகும். இதைக்குறித்து முன்னதாகவே நெல்லி குப்பத்துக்கடுத்த பாலூர் விவசாயப் பண்ணை பாரம் மானேஜர் அவர்களுக்கு சொந்தக்கடிதம் எழுதி முன் பணம் அனுப்பிவைத்தால் அவர்கள் வேண்டிய உபகாரம் செய்வார்களென்று எண்ணுகிறேன். சர்க்கார் ஒதாவில் எழுதக்கூடாது.

ஜிப்சம் பாரி அன்ட்கோ சாணிப்பேட்டை எருக்கிடங்கில் கிடைக்கக்கூடும் அவர்களுக்கு விலை விபரம் எழுதிக் கேட்டுக் கொள்ளவும்.

காரவிளை நெல்விதை இவ்விராஜதானியில்தற்காலமிருப்பதாக புலப்பட

வில்லை. ஆனால் காரவினு விவசாய டிபார்ட்டு மெண்டாருக்கு எழுதினால் ஒருவேளை கிடைக்கும், இத்தினுசு புழுதியில் விதைப்பதில்லை. எக்கருக்கு 24படி விதை விதைப்புக்குப் பிடிக்கும்.

பொட்டூர் பச்சைப்பயறைக் குறித்து பல்லாரி சர்க்கிள் விவசாய டெப்டி டைரெக்டர் அவர்களுக்கு எழுதலாம். பர்மா மொச்சை சென்னை கொத்துவால் சாவடி கடைகளில் கிடைக்கும். எள்ளு விதைக்கும் காலம் தை மாசியாகையால் ஆங்காங்கு இருக்கும் எண்ணெய் வியாபாரிகளிடம் கிடைக்கும். கத்திரி ஜாதியில் பெரிதான ஜாதி வேங் டிமெங்ஜல்ஜபண்ட் பிரின்ஜால் என்பதை விதை வியாபாரிகளிடம் வருவித்துக் கொள்ளலாம். பெங்களூர், பூனா விதை வியாபாரிகளுக்கு எழுதினால் அவர்கள் கணக்கில் தான் அனுப்புவார்கள். இலாபகரமான ஜாதி அந்தந்த ஊர்களில் வியாபாரமாகக்கூடிய ஜாதிதான், மெஸர்ஸ் பெஸ்டன்ஜி போர்சாஜி போர்சா, செடி வியாபாரிகள் பூனா என்ற விலாசத்தில் கிடைக்கும். ஆங்கிலத்தில் எழுதவேண்டும்.

நாவல் பழச்செடி, பப்பாளிச்செடி விதைகள் பெங்களூரிலிருக்கும் செடி வியாபாரிகளான முனிசாமி அண்ட் சன்ஸ், ருத்ரப்பா அண்ட் சன்ஸ், எம்பையர் நர்சரி, ஓபவப்பா பிரதர்ஸ், தேவப்பா பிரதர்ஸ் முதலிய வியாபாரிகளுக்கு எழுதி தருவித்துக் கொள்ளலாம். பப்பாளிச்செடிகள் மாத்திரம் விதையிலிருந்து முளைக்கும் எல்லாம் பெண்செடிகளாகவே யிருக்குமென்ற கொள்கை இல்லை. சென்னை அக்ரிகல்சரல் சொஸைடி சூப்பரின்டெண்டு அவர்களும் இச்செடிகளை வருவித்துக் கொடுக்கக்கூடும், அவர்களுக்கும் எழுதிக்கொள்ளலாம். பாபூல்மரம் என்பது வேலமரமே யொழிய வேறல்ல. இதில் இரண்டு தினுசுண்டு. வெள் வேலம் 1 கருவேலம் ஒன்று இந்த இரண்டும் சாதாரணமாய் கிடைக்கக்கூடிய விதைகள். காய்க்கும் காலங்களில் மூட்டை கணக்காய் கூட வாங்கக்கூடும். கொழிஞ்சி விதை வேண்டியதானால் சமீபத்திலுள்ள விவசாய டிமான்ஸ்ட்ரேட்டருக்கு எழுதினால் வருவித்துக் கொடுப்பார்கள்.

சப்பாத்தி கள்ளியை முள் எடுக்காமலே அழுகவைத்து எருவாக்கலாம். அழுகின உடன் முள்கள் படுத்துக்கொள்ளும். கட்டமாய் நிற்கலாது. அப்போது அதனுடைய பாதையிருக்க மாட்டாது. சப்பாத்து கள்ளியை சுண்ணாம்பு அரைக்கும் ஆலையில் ஆட்டி அல்லது நறுக்கி எருவாக்கினால் ஜல்தி எருவாக்க முடியும்.

ப. ர.

ஸ்ரீமான் கிருஷிகன் பத்திராசிரியரவர்களுக்கு.

ஐயா,

எனக்கு சுமார் 40 ஏக்கர்வரை தோட்டக்கால் நிலமிருக்கின்றன. இவற்றிற்குச் சுமார் 30 அடி முதல் 40 அடி ஆழம் வரையுள்ள நான்கு கிணறுகள் இருக்கின்றன. இந்நிலங்கள் பூராவாகவும் மாடுகளால் (காலச்சாகுபடியிற்கூட) தண்ணீர் இறைத்துச் சாகுபடி செய்வது கஷ்டமாயும்;

கஷ்டமாயுமிருக்கிறது. இப்பொழுது அநேக இடங்களில் தண்ணீர் இறைக்கும் என்ஜின்கள் ஏற்பட்டு வருவதைப்பார்த்தால், நாமும் அம்முறையைக் கையாண்டால், இப்பொழுது மாடுகளை வைத்துக் கொண்டு தண்ணீர் இறைப்பதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களும் வீண் கால தாமசமும் ஏற்படாதென நினைக்கிறேன்.

ஆகையால் தாங்கள் தயவுசெய்து அடியிற்கண்ட சில கேள்விகளுக்குக் கடித மூலமாய் விடை யளிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். பதிலுக்காக இத்துடன் ஒரு அஞ்சல்ஸ்டாம்பும் அனுப்பியிருக்கிறேன், கிருஷிகனில் பிரசுரித்து விடை கொடுப்பதானால், ரொம்ப காலதாமதமாகுமாகையாலும் நடவை கால மாரம்பித்து விட்டபடியாலுந் தான் கடித மூலமாய் விடை கொடுக்கும்படியாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

(ஐயவினாக்கள்)

(1) குறைந்த பக்ஷம் 40 அடி ஆழத்திலிருந்து தண்ணீரை இறைக்கக் கூடியதாகவும்,

(2) இலகுவில் ரிப்பேர் முதலியன செய்து கொள்ளக்கூடியதாகவும்,

(3) சாதாரண மனிதர்களும ஓட்டக்கூடியதாகவும்,

(4) சௌகரியமான விலைக்குக் கிடைக்கக் கூடியதாகவும்,

(5) குறைந்த செலவு பிடிக்கக் கூடியதாகவும்

(6) நீடித்து உழைக்கக்கூடியதாகவும், (அவசியமானால் தண்ணீர் இழுத்தலோடு, மற்றக் காலங்களில், எலெக்ட்ரிக்லைட், கடலை உடைத்தல், மாவு அரைத்தல், பருத்தி அரைத்தல், நெல் குத்துதல், முதலிய வேலைகளுக்கும் உபயோகித்துக் கொள்ளக் கூடியதாகவும்) உள்ள என்ஜின்கள் யாரிடம் என்ன விலைக்குக் கிடைக்குமென்றும் ஷை என்ஜின்களின் பெயர்கள் என்னவென்றும், மேலேகண்ட என்னுடைய அபிப்பிராயம் அநுபவத்தில் பலன் தரத்தக்கதாகுமென்றும், இல்லையானால் வேறு எவ்வழியில் நான் முயற்சிக்கலாமென்றும், விவரமாகப் பதில் அனுப்ப வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

சி. சு. மு. சு. காசி முத்து ரெட்டியார்

பதில்

ஐயா,

தண்ணீர் இறைக்கும் இஞ்சினைப்பற்றி சேப்பாக்கத்திலிருக்கும் இண்டஸ்டிரியல் இஞ்சினீர் அவர்களுக்காவது தஞ்சாவூரிலிருக்கும் அசிஸ்டண்டு இண்டஸ்ரியல் இஞ்சினியருக்காவது எழுதினால் விவரமான பதில் எழுதுவார்கள். எமக்கு இஞ்ஜின்களைப்பற்றி போதிய அனுபவமில்லை. செங்கல்பட்டு ஜில்லா பூந்தமல்லி போஸ்ட் செட்டியார்அகரம் கிராமத்திலிருக்கும் ஸ்ரீமான்

வெங்கட்ட ராமய்யர் அவர்களுக்கு எழுதியதிலும் பல இஞ்சின்கள் வைத்து அவர்கள் அடைந்த பலா பலன்களைக் கொண்டும் அவர்கள் அநுபவத்தை யொட்டியும் தெரிவிப்பார்கள். நமக்கு அவைகளைப் பற்றி அதிகம் தெரியாது. ஆனால் ஒன்றுமட்டும் சொல்லுவோம்: குறைந்தது நாலு கவலைகள் ஏக சமயத்தில் இறைப்பதற்குப் போதிய தண்ணீர் ஒரு கிணற்றிலிருந்தால் மட்டும் தான் இஞ்சினைப் பற்றி யோசிக்க வேண்டும். அதற்கு குறைந்த தண்ணீரிருந்தால் இஞ்சின் வைப்பது லாபகரமாயிராது. ப. ர.

கிருஷிகன் பத்திராதிபரவர்கட்கு

அன்பார்ந்த ஐயா,

தங்கள் மாதப் பத்திரிகையில், முதல் வரும் வியாஸங்களை, 'ஹிந்து' போன்ற, ஆங்கில பத்திரிகைகளில் பிரசுரித்தால், பலரும் பயன்படமாட்டாரோ? கிராமங்களில் படிப்பவர்கள், 'ஹிந்து' படிக்காவிட்டாலும், பட்டணங்களில் படித்த வாலிபர்களில் சிலராவது அதனால் நம் நாட்டில் இருக்கும் பூஸ், ஊத, அறிக்ஈ, வேலைகளுக்குப் போகாமல், கிராமங்களுக்குப் போக மாட்டார்களா? தாங்கள் முந்திரிப் பயிரைப்பற்றி எழுதும்போது அயல் நாட்டார் இதை நம்மூரில் பயிர்செய்கிறார்களென்று எழுதினீர்கள். இதை நம்மவர் செய்வதற்கு என்ன தடை? தாங்கள் ஆங்கிலபத்திரிகைகளிலும் இதர பத்திரிகைகளிலும் எழுதினாலோ அல்லது பழைய கிருஷிகனிலும் தெரிந்தெடுத்த வியாஸங்களை மொழி பெயர்த்து பிரசுரிக்க ஏற்பாடு செய்தாலும் பலருக்கும் பயன்பட்டு கிருஷிகனையும் இன்னும் பலர் படித்து அதால் விருத்திக்கு வருவார்களென்று எனக்குத் தோன்றுகிறது.

மு. க. கிருஷ்ணமாச்சாரி

பதில்

கிருஷிகன் பத்திரிகையை ஆங்கிலேய தமிழ், தினம், வாரம், மாதாந்தரப் பத்திரிகைகளுக்குமாற்றுப் பத்திரிகையாக அனுப்பிக் கொண்டுதான் வருகிறோம். இப்படி அனுப்புவது அந்தப் பத்திராசிரியர்கள் முக்கியவிஷயங்களை எடுத்து தங்கள் பத்திரிகைகளில் கிருஷிகன் பத்திரிகையில் வெளியிட்ட சமாசாரம் என்று பரவச்செய்யும் கருத்து கொண்டேதான். ப. ர.

## Central Board of Agriculture—மத்ய விவசாய போர்ட்

பூசாவில் ஈனது மீ 11௳ நடந்த கூட்டத்தில் ஸ்ரீமான் விஜய ராகவாசாரியார் அவர்கள் திறப்பு உபந்யாசம் செய்தபோது இது முதல், "விவசாய, கால்நடை பராமரிப்பு போர்ட்" என்று பேர் கொடுத்திருப்பதாகவும், ஒரு பகுதி பயிர், விதை முதலியவற்றையும், மற்றொரு பகுதி கால்நடை அவைகளின் சுகாதாரம் பராமரிப்பு முதலியவைகளையும் கவனித்து வருமென்றும், இப்போது போதிய பணமிருப்பதால் இனி போர்டார் அவர்கள் தீர்மானங்கள் நிறைவேறுமென்ற நம்பிக்கையுடன் சிபார்சு செய்யலாமென்றும் சொன்னார்கள்.

# கிருஷ்ணன் பஞ்சாங்கம்

சுக்லஹூ தைமீ,—சாலிவாகன் 1851 கலியுகாதி 5030 பசலி 1339

கொல்லம் 1105, இங்கிலீஷ் 1930 ஜனவரிமீ—பிப்ரவரிமீ

| ஷாபன்மீ | ஜனவரி | தை | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | 14 | 1 | செ | சது 1-7 ○ பவு53-42 | திரு7-19 | ம7சி | கரிநாள், பொங்கல் காலை 9க்கு அடுப்பு திறக்க |
| 14 | 15 | 2 | புத | பிர 48_28 | புன3-10 பூச55_13 | சி60 | கரிநாள்மாலை நாலரைக்கு மேல் மாட்டுப்பொங்கல் |
| 15 | 16 | 3 | வி | துதி42-24 | ஆயி54_22 | சி54அ | கரிநாள் |
| 16 | 17 | 4 | வெ | திரு37-22 | மக51-11 | ம51சி | யந்திரம் வாங்க |
| 17 | 18 | 5 | சனி | சவு 32-25 | பூர48 25 | சி48ம | சுபம் நீக்க |
| 18 | 19 | 6 | ஞா | பஞ்29 7 | உத்45-27 | அ45சி | மகரம்விவாகம்உபநயனம் |
| 19 | 20 | 7 | தி | சஷ்25-19 | அஸ்43-19 | சி43ம | கர்ணபூஷணமுகூர்த்தம் |
| 20 | 21 | 8 | செ | சப்22_24 | சித்14-27 | சி60 | இரவு கிழக்கு பிரயாணம் |
| 21 | 22 | 9 | புத | அஷ்21-39 | சுவா44-44 | சி60 | மகரம் விவாஹம் |
| 22 | 23 | 10 | வி | நவ2.-32 | விசா46-19 | சி60 | மாலை கிழக்கு பிரயாணம் |
| 23 | 24 | 11 | வெ | தச21-24 | அநு50-27 | சி60 | கரிநாள் |
| 24 | 25 | 12 | சனி | ஏகா24- 5 | கே54-25 | சி60 | சுபம் விலக்க |
| 25 | 26 | 13 | ஞா | துவா29-39 | மூல58_44 | அ59சி | மகரம நூதன வியாபாரம் |
| 26 | 27 | 14 | தி | திர32-40 | பூரா60-0 | ம60 | தானியம் வாங்க |
| 27 | 28 | 15 | செ | சது39-19 | பூரா5,24 | சி5ம | இரவு பெண்கேட்க |
| 28 | 29 | 16 | புத | ● அ43-44 | உத்ர12-19 | அ12சி | மாலை மேற்கில்பிரயாணம் |
| 29 | 30 | 17 | வி | பிர 50-9 | திரு18 40 | சி60 | கரிநாள் |
| 30 | 31 | 18 | வெ | துதி52-20 | அவி25-26 | சி60 | மாலை கெர்ப்பாதனம் |
| 1 | 1 | 19 | சனி | திரு56-24 | சத29-17 | அ29ம | காலை வடக்கு பிரயாணம் |
| 2 | 2 | 20 | ஞா | சது57.58 | பூரட்33,19 | சி33அ | மாலை ருதுசாந்தி |
| 3 | 3 | 21 | தி | பஞ்60.0 | உத்35-46 | சி60 | கும்பம் விவாஹம் உபநயனம் |
| 4 | 4 | 22 | செ | பஞ்2-2 | ரே 38-27 | சி60 | கிழக்கு பிரயாணம் |
| 5 | 5 | 23 | புத | சஷ்1-10 | அஸ் 40-26 | அ40சி | ரதசப்தமி |
| 6 | 6 | 24 | வி | சப்0-8 அஷ்56-46 | பர38_25 | சி38ம | சுபம் நீக்க |
| 7 | 7 | 25 | வெ | நவ53-38 | கிரு37-26 | சி37ம | மாலை அபிஷேகம் |
| 8 | 8 | 26 | சனி | தச48,40 | ரோ34-24 | சி60 | காலை வடக்கு பிரயாணம் |
| 9 | 9 | 27 | ஞா | ஏகா43-49 | மிரு31-10 | சி60 | கும்பம் விவாஹம் |
| 10 | 10 | 28 | தி | துவா39_24 | திரு26.54 | சி27அ | கிழக்குநட |
| 11 | 11 | 29 | செ | திர31-2 | புன22,19 | சி60 | தான்யம் வாங்க விற்க; |

## THE JOURNAL OF THE
### Madras Agricultural Students Union

A Monthly Journal in English devoted to the Study of Improved Agriculture. Articles of Scientific and general interest are published along with Extracts and reviews from various Journals both Indian and foreign: Subscription per annum Rs Four. Single copy As Six.

Apply to Manager M. A. S. U Journal,
Agricultural College, Lawley Road P O Coimbatore.

ஸ்ரீமதி வை மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

### "சண்பகவிஜயம்"

'இந்த நாவல் இது சிறந்த நாவல்' படிப்பதில் ஆர்வமுடையோர் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத்தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது.

இது பாலவிநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி திரு அ- சுப்ரமண்ய பாரதியார் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவர், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச் சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகபோக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும், நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தமகுணப்பெண்ணின் இலக்ஷணங்களையும், அநேக மேற்கோள்களுடன் விளங்கவைத்திருக்கிறபடியால் இந்த நாவல் கேவலம் நாவல் வகையில் எண்ணிப் புறக்கணிக்கத்தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம். விலை ரூ 1—12—0

ஜெகன்மோகினி ஆபீஸ். திருவல்லிக்கேணி சென்னை

## இந்திய விவசாயம்

ஓர் விவசாய மாதப்பத்திரிகை

வருடசந்தா ரூ1-

இதில் கமத்தொழில், கால்நடை பரிபாலனம், கூட்டுறவு சிறுதொழில்கள் முதலிய கிருஷிகருக்கு வேண்டிய சகல விஷயங்களும் பிரதிமாதமும் வெளிவரும். (தனிசஞ்சிகை அணா ஒன்றரை)

மானேஜர் இந்திய விவசாய ஆபீஸ்
தெப்பக்குளம் போஸ்ட் திருச்சி

Printed and Published by J.R. Rangaraju
at the Raju Press "Jagannatha Baugh" Saidapet.